65

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

18595

மலர் 3 Vol. 3	வெகுதான்ய ஹூ ஆனிமீ 1௳ ஜூன்—1938	இதழ் 3. No. 3.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

பூரண வாரகும்ப சீதப டீர கோங்கை
மாதர்வி கார வஞ்ச லீலையி லேயு ழன்று
போதவ மேயி ழந்து போனது மான மேன்ப
தறியாத

பூரிய ஞகி நெஞ்சு காவல்ப டாத பஞ்ச
பாதக ஞய றஞ்சே யாதடி யோடி றந்து
போனவர் வாழ்வு கண்டு மாசையி லேய முந்து
மயல்தீரக்

காரண காரி யங்க ளானதே லாமோ ழிந்து
யானெனு மேதை விண்டு பாவக மாயி ருந்து
காலுட ஹாடி யங்கி நாசியின் மீதி ரண்டு
விழிபாயக்

காயமு நாவு நெஞ்சு மோர்வழி யாக அன்பு
காயம்வி டாம லுன்ற னீடிய தாள்நி னைந்து
காணுதல் கூர்த வஞ்சே யோகிக ளாய்வி ளங்க
அருள்வாயே

ஆரண சார மந்த்ர வேதமே லாம்வி ளங்க
ஆதிரை யானை நின்று தாழ்வனே னுவ ணங்கு
மாதர வால்வி ளங்கு பூரண ஞான மிஞ்சு
முரவோனே

ஆர்கலி யூடெ ழுந்து மாவடி வாகி நின்ற
சூரனை மாள வென்று வானுல காளு மண்ட
ரானவர் கூர ரந்தை தீரமு னாள்ம கிழ்ந்த
முரு கேசா

வாரண மூல மென்ற போதினி லாழி கொண்டு
வாவியின் மாடி டங்கர் பாழ்பட வேயெ றிந்த
மாமுகில் போலி ருண்ட மேனிய னாமு குந்தன்
மரு கோனே.

வாலுக மீது வண்ட லோடிய காலில் வந்து
சூல் நிறை வான சங்கு பால்மணி யீன வுந்து
வாரிதி நீர்ப ரந்த சீரலை வாயு கந்த
பெருமாளே.

பதவுரை.

ஆரண சார மந்த்ர - வேதத்தின் சாரமாகிய பிரணவ மந்திரப் பொருளால், வேதம் எலாம் விளங்க - வேதத்திலுள்ள இரகசியங்கள் முழுவதும் நன்றாக விளங்கும்படி, ஆதிரையான் - (ஐ-சாரியை) திருவாதிரை நக்ஷத்திரத்திற்கு உரித்தானவராகிய சிவபெருமான், நின்று தாழ்வன் என வணங்கும் - வாய் பொத்தி எதிரில் நின்று "நின்னைப் பணிகின்றேன்" என்று கூறி வணங்கும்படியான, ஆதரவால் விளங்கு - அன்பினால் விளங்குகின்ற, பூரண ஞான மிஞ்சும் உரவோனே - நிறைந்த ஞானம் ததும்பிய அறிவாற்றலுடையவரே! ஆர்கலி யூடு எழுந்து மா வடிவு ஆகி நின்ற - சமுத்திரத்தின் நடுவில் மாமரத்தின் வடிவத்தைக்கொண்டு நின்ற, சூரனை மாளவென்று - சூரபன்மனை இறக்கச்செய்து வெற்றிபெற்று, வான் உலகு ஆளும் அண்டர் ஆனவர் கூர் - தேவலோகத்தை யாள்கின்றவர்களான தேவர்கள் அடைந்த, அரந்தை தீர - துன்பமானது அகலும்படிச் செய்து, முன் நாள் மகிழ்ந்த முருக ஈசா - முன்னொரு காலத்தில் மகிழ்ச்சியடைந்த முருகப் பெருமானே!, வாரணம் மூலம் என்ற போதினில் - கஜேந்திரமென்ற யானை "ஆதி மூலமே" என்று

அழைத்தபோது, ஆழி கொண்டு - சக்கராயுதத்தைக்கொண்டு, வாவி யின் மாடு - மடுவிலிருந்த, இடங்கர் - முதலையானது, பாழ்படவே எறிந்த - அழிந்துபோகுமாறு அதை அறிந்தருளியவரும், மாமுகில் போல் இருண்ட மேனியன் ஆம் - சிறந்த மேகத்தைப்போல் . கரிய திருமேனியை யுடையவருமாகிய, முகுந்தன் - நாராயணமூர்த்தியி னுடைய, மருகோனே - மருமகரே! வாலுகமீது - (நதியின் முகத் துவாரத்தில் சமுத்திரக்கரையிலுள்ள) மணலின்மீது, வண்டல் ஓடிய காலின் வந்து - வண்டல் ஓடி படியப்பட்ட கிளைநதி வழியாக வந்து, சூல் நிறைவான சங்கு - நிறைந்த கருப்பமுற்ற சங்கினங்கள், மாமணி ஈன - சிறந்த முத்துக்களைப் பெறும்படி, உந்து வாரிதி நீர் பரந்த - செலுத்துகின்ற அலைகளையுடைய சமுத்திரத்தின் நீர் எங்கும் பரந்துள்ள; சீரலைவாய் நகர் மேவிய - திருச்சீரலைவாய் என்னும் புண் ணிய க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய, கந்த - கந்தசுவாமியே!, பெரு மாளே - பெருமையின் மிக்கவரே!, பூரண வார கும்ப - பூரணமாக வளர்ந்துள்ளவையும் அன்பைப் பெருக்குபவையும் குடத்திற்கு நிக ரானவையும், சீத படீர கொங்கை - குளிர்ந்த சந்தனக்குழம்பு பூசப் பெற்றவையுமாகிய தனங்களையுடைய, மாதர் - விலைப்பெண்களது, விகார வஞ்ச லீலையிலே உழன்று - விகாரத்தை யுண்டுபண்ணுவதும் வஞ்சத்தையுடையதுமாகிய கலவி லீலையிலே ஈடுபட்டு அதனிடத்தி லேயே மயங்கிச் சுழன்று, போது அவமே இழந்து - பொழுதை வீணுகக்கழித்து, மானம் போனது என்பது அறியாத - மானம் போய் விட்டது என்பதைத் தெரிந்துகொள்ளாத, பூரியன் ஆகி - கீழ்மக ளுகி, நெஞ்சு காவல் படாத - இன்னதைத்தான் நினைக்கவேண்டும் இன்னதை நினைக்கப்படாது என்ற நியதிக்காக நெஞ்சத்தில் நல்லு ணர்வாகிய காவலை வைக்காத, பஞ்ச பாதகனுய் - ஐம் பெரும்பாத கங்களைச் செய்பவனுய், அறஞ்செயாது - தருமத்தைச் செய்யாமல், அடியோடு இறந்துபோனவர் வாழ்வுகண்டும் - இருந்த சுவடேயின்றி அறவே இறந்தவர்கள் மாயவாழ்வைக்கண்டும், ஆசையிலே அழுந் தும் - ஆசையாகிய கடலில் அழுந்துகின்ற, மயல்தீர - மயக்கம் நீக் கும் வண்ணம், காரண காரியங்கள் ஆனது எலாம் ஒழிந்து - வினை களின் காரணமாக இருப்பதும் காரியமாக வருவதுமாகிய அனைத் தும் நீங்கப்பெற்று, யானெனும் மேனதை விண்டு - நான் என்கின்ற தற்போதத்தை விட்டு, பாவகமாய் இருந்து - குஹோஹம் பாவனை யில் அசைவற்று இருந்து, கால் உடனுடு இயங்கி - பிராணவாயு

வானது இரேசக பூரக கும்பகமாகிய சாதனையால் உடலில் வியாபிக்கப்பெற்று, நாசியின்மீது இரண்டு விழி பாய – நாசி முனையில் இரு விழிகளின் பார்வையைச் செலுத்தி, காயமும் நாவும் நெஞ்சும் ஓர் வழியாக - உடலும் உரையும் உள்ளமும் ஒருவழிப்பட்டு நிற்க, அன்பு காயம் விடாமல் - அன்பானது உடம்பைவிட்டு நீங்காத வண்ணம், உன்றன் - தேவரீரது, நீடிய தாள் நினைந்து - நித்தியமான திருவடிக்கமலங்களைச் சிந்தித்து, காணுதல் கூர்தவஞ்செய் - அத்திருவடித்தாமரைகளைப் பார்ப்பதற்கு விரும்பித் தவம்புரியும், யோகிகளாய் விளங்க - சிவயோகிகளைப்போல் அடியேன் நிருவிகற்ப சமாதியில் நிலைபெற்று விளங்க, அருள்வாயே - அருள்புரிவீர்.

பொழிப்புரை.

வேதத்தின் சாரமாகிய குடிலை மந்திர உரையால், அவ்வேதத்தினுள்ள இரகசியப் பொருள்கள் யாவும் நன்றாக விளங்கும்படி, திருவாதிரை நட்சத்திரத்திற்கு உரித்தானவராகிய சிவமூர்த்தி, வாய் பொத்தி நின்று, (நாதா குமரா) "உன்னை நமஸ்கரிக்கின்றேன்" என்று கூறி வணங்கும்படியான தன்மையால், உயர்ந்து விளங்குகின்ற பரிபூரண ஞானமிகுதியுடைய உரவோனே!, முன்னொரு காலத்தில் சமுத்திரத்தின் மத்தியில் மாமா வடிவுகொண்டு நின்ற சூரபன்மன் மாளும்படி வெற்றிபெற்று, வானுலகத்தை யாளும் தேவர்கள் அடைந்த துன்பம் நீங்கும்படி யருள்புரிந்து, மகிழ்ச்சியடைந்த முருகப்பெருமானே!, கஜேந்திரம் என்ற யானை "ஆதிமூலமே" என்று அழைத்தபோது, மடுவிலிருந்த முதலை யழியுமாறு சக்ராயுதத்தை விடுத்தருளியவரும், பெருமையுடைய நீலமேகவண்ணருமாகிய திருமாலினது மருமகரே! (நதியின் முகத்துவாரத்தில் சமுத்திரக்கரையிலுள்ள) மணற்குன்றின்மீது, வண்டல்வந்து படியப்பட்ட கிளைநதி வழியாக வந்து, பூரண கருப்பமான சங்குகள் சிறந்த முத்துக்களைப்பெறும்படி செலுத்துகின்ற அலைகளையுடைய சமுத்திரத்தின் நீர் எங்கும் பரந்துள்ள திருச்சீரலைவாய் என்னும் செந்திலம்பதியில் எழுந்தருளியுள்ள கந்தப்பெருமானே! பெருமையிற் சிறந்தவரே!, நன்றாக வளர்ந்துள்ளவையும் ஆசையைப் பெருக்குபவையும் குளிர்ந்த சந்தனக்குழம்பைப் பூசப்பெற்றவையுமான தனபாரங்களையுடைய விலைமாதர்களது விகாரத்தையுண்டாக்குவதும் வஞ்சகமுடையதுமாகிய கலவிலீலையிலே ஈடுபட்டு மயங்கிச் சுழன்று, அரிய வாழ்

நாளை அவமே கழித்து மானம் அழிந்துவிட்டது என்பதையுணராத கீழ்மகனாகி, இன்னதைத்தான் நினைக்கவேண்டும் இன்னதை நினைக்கப் படாது என்ற நியதிக்காக நெஞ்சத்தில் நல்லுணர்வாகிய காவலை வைக்காத பஞ்சபாதகனாகி, தருமத்தைச் செய்யாது தாமிருந்த அடையாளமேயின்றி அடியோடு அழிந்துபோனவர்களைக் கண்டும் ("நாமும் இப்படியே யழிவோ" மென்ற உணர்ச்சி யின்றி) ஆசையாகிய சமுத்திரத்தில் அழுந்துகின்ற மயக்கந்தீரும்படி, உடல் எடுப்பதற்குக் காரண காரியங்களாயுள்ளவை யனைத்தும் நீங்கப் பெற்று, நான் என்ற தற்போதத்தை யொழித்து, சூஹோஹம் பாவனையில் அசைவற்று இருந்து, இரேசக பூரக கும்பகமென்னும் சாதனையால் உடலில் பிராணவாயு வியாபிக்கப்பெற்று, நாசிமுனையில் விழிகளின் பார்வையைச் செலுத்தி, உடலும் உரையும் உள்ளமும் ஒருவழிப்பட்டு நிற்க, உடலில் அன்பு என்னும் தத்துவம் நீங்காத வண்ணம் தேவரீருடைய நித்தியமான திருவடித்தாமரைகளைச் சிந்தித்து, அத்திருவடித்தாமரைகளைப் பார்ப்பதற்கு விரும்பித் தவம்புரியும் சிவ்யோகிகளைப்போல் அடியேன் விளங்கத் திருவருள்புரிவீர்.

விரிவுரை.

போதவமே பிழந்து :—

உலகத்தில் அரிய பொருளாகக் கருதப்படுகின்றவை யனைத்திற்கும் அரியது வாழ்நாளேயாம். ஒவ்வொரு நிமிஷமும் விலைமதிக்க முடியாததாம்; கழிந்துபோன ஒரு நிமிஷத்திற்கு எத்தனைகோடி செல்வத்தைக்கொடுத்தாலும் திரும்பவாராது; அதன் அருமை நுனித்துணர்வார்க்குப் புலனாகும். அத்தகைய அருமையான நாள்களை வீணேகழித்துவிடுகின்றோம். ஒவ்வொரு நிமிஷத்தையும் நல்ல விஷயத்திலேயே கழிக்கவேண்டும்.

"வீணேநாள் போய்விடாமல் ஆறுறுமீதில்
ஞானோபதேசம் அருள்வாயே"

—திருப்புகழ்.

நேஞ்சு காவல்படாத :—

வீட்டுவாயலில் தக்கவனைவிடு; தகாதவனை விடாதே என்று காவல் வைப்பதுபோல் நெஞ்சில் நல்லுணர்வு என்ற காவலை வைக்க வேண்டும். அதனால் தீய எண்ணங்களை எண்ணுதற்கு இடமிராது நல்லெண்ணங்களே தோன்றும்.

அடியோ டிறந்துபோ னவர்வாழ்வு கண்டும் :—

பெருமையுடன் வாழ்ந்தவர்களும் தமது அடையாளமே இன்றி இறந்துபோவதைக்கண்டாவது " நாமும் இறந்துபோவோம் "என்று எண்ணித் தெளிவடையவேண்டும்.

நானெனும் மேதை விண்டு :—

நான் என்கின்ற எண்ணம் ஒழிந்தால்தான், பரம சுகம் தலைப் படும்.

"நானென்ப தற்றுயிரோ டூனென்ப தற்றுவெளி
நாதம் பரப்பிரம ஒளிமீதே"
—திருப்புகழ்.

பாவகமாயிருந்து :—

குஹோஹம் பாவனையில் அசைவற்றிருப்பது. குஹமூர்த்தி யாகத் தன்னைப் பாவிப்பது; விடமேறியவன் கருடனுகத் தன்னைப் பாவிப்பதாகிய கருடோஹம் பாவனையால், விடநீங்கப் பெறுவது போல், குஹோஹம்பாவனையால் மல நிவர்த்தியடையும்.

காயமு நாவு நெஞ்சும் ஓர்வழியாக :—

மனம் வாக்கு காயம் என்ற திரிகரணங்களும் ஒருவழிப்படுதலே இன்பத்திற்குக் காரணமாம். இறைவனை நினைக்குங் காலையிலும் ஒருவழிப்பட்டு நிற்கவேண்டும்.

" வாயுந் தனுவு மனமுமோரு வழிநின் றிடநின் மகிமைதனை
ஆயுந்திறமை வரவிலையே ஐயோ இதற்கென்செய்வேன்நான்"
—மாம்பழக்கவி.

மாமரமாகி நின்ற சூரனை மாளவென்று :—

சூரபன்மன் முடிவுநாளையில் கடலின் மத்தியில் பெரியதோர் மாமரமாகி நின்றான். அம்மாமரத்தின் உயரம் நூறுயிரம் யோசனை; எண்ணிலாத கிளைகள் ; ஊழிமாருதத்தினும் பன்மடங்கு அதிகமாகக் காற்றையுண்டாக்கியது ; அம்மரத்தின் நிழல் கடல், நிலம் முதலிய எங்கும் பரந்திருந்தது; இருப்பினும் வன்மையாக இருந்தது அதன் இலைகள்; அம்மரத்தின் கிளைகள் அசைவதால் எல்லா உலகங்களும் அசைந்தன; சந்திர சூரியர் கதிமாறினார்கள்; மேருகிரி அடிபெயர்ந் தசைந்தாற்போலசையும்; அத்தருவின் பாரத்தைப் பணியரசன் தாங்கமுடியாது வருந்தினான் ; எழுகடல்களும் ஒன்றாயின ; திக்கஜங் கள் வருந்தின ; உடுக்கள் உதிர்ந்தன ; இந்திராதி தேவர்கள் கயிலை

மேரு முதலிய இடங்களிற்சென்று ஒளிந்தனர் ; சுவர்க்கலோகங்கள் இடிந்தன ; அண்டகோளங்கள் வெடித்தன ; இவ்வாறு நின்ற மாமரத்தைக்கண்ட எம்பெருமானது வேலாயுதம் சினந்து, ஆயிரங் கோடி யண்டத்து அங்கியும் ஒன்று கூடினாற்போல் தேவரும் யாவரும் அஞ்சுமாறு சென்று, அப்பெரிய மாமரத்தைப் பிளந்தெரிந்தது.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற் றேய்த்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வ மிவ்வா றுருகெழ சேலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுத றடிந்த தன்றே.

கந்தபுராணம்.

வாரண மூலமேன்ற . . . . . யேறிந்த

கஜேந்திரன் வரலாறு

திருப்பாற் கடலாற் சூழப்பட்டதாயும், பதினாயிரம் யோஜனை உயரமுடையதாயும், பெரிய ஒளியோடுகூடியதாயும், திரிகூடமென்ற ஓர் பெரிய மலையிருந்தது. சந்தனம் மந்தாரம் சண்பகம் முதலிய மலர்த்தருக்கள் நிறைந்து எப்போதும் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. அம்மலையில் குளிர்ந்த நீர் நிலைகளும் நவரத்தினமயமான மணற்குன்றுகளும் தாமரை ஓடைகளும் பற்பல இருந்து அழகு செய்தன. கந்தருவரும், இந்திரர் முதலிய இமையவரும், அப்சரஸ் மாதர்களும்வந்து அங்கு எப்போதும் நீராடி மலர்கொய்து விளையாடிக் கொண்டிருப்பார்கள் நல்ல தெய்வமணம் வீசிக்கொண்டிருக்கும் அவ்வழகிய மலையில் வளமை தங்கிய ஒரு பெரிய தடாகமிருந்தது. அழகிய பூந்தருக்கள் சூழ அமிருதத்திற்கு ஒப்பான தண்ணீருடன் இருந்தது அத்தடாகம். அந்தத் திரிகூடமலையின் காடுகளில் தடையின்றி உலாவிக்கொண்டிருந்த கஜேந்திரமென்கின்ற ஓர் யானையானது, அநேக பெண்யானைகளாலே சூழப்பட்டு, தாகத்தால் மெலிந்து, அந்தத் தடாகத்தில்வந்து அதில் முழுகி தனது தும்பிக்கை நுனியால் வீசப்பட்ட நீர்த்துளிகளால் பெண்யானைகளையும் குட்டிகளையும் நீராட்டிக்கொண்டு மிகுந்தகளிப்புடன் விளையாடிக்கொண்டிருந்தது. அப்போது ஒரு முதலை அந்த யானையின் காலைப்பிடித்துக் கொண்டது. அக்கஜேந்திரம் தன்னால் கூடியவரைக்கும் முதலையை இழுக்கத் தொடங்கிற்று. முதலையை வெற்றிபெருஞ் சக்தியின்றி தவித்தது. கரையிலிருந்த மற்ற யானைகள் துக்கப்பட்டு அந்த

யானையை முயற்சிசெய்தும் காப்பாற்ற முடியவில்லை; யானைக்கும் முதலைக்கும் ஆயிரம் ஆண்டு யுத்தம் நிகழ்ந்தது; கஜேந்திரம் உண வின்மையாலும் முதலையால் பலவாண்டுகள் துன்புற்றமையாலும் எலும்புமயமா யிளைத்து யாதும் செய்யமுடியாமல் அசைவற்றிருந் தது. பின்பு தெளிந்து துதிக்கையை உயர்த்தி பக்தியுடன் "ஆதி மூலமே!" என்று அழைத்தது. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை யென்று உணர்ந்த அந்த யானை அழைத்த குரலை, பாற்கடலில் அர வணைமேல் அறிதுயில் செய்யும் நாராயணமூர்த்தி கேட்டு, உடனே கருடாழ்வான்மீது தோன்றி, சக்கரத்தைவிட்டு முதலையைத்தடிந்து, கஜேந்திரத்திற்கு அபயந்தந்து அருள் புரிந்தனர். சிவபெருமான் தமக்குத்தந்த காத்தற்றொழிலை மேற்கொண்ட நாராயணர் காத்தற் கடவுளாதலால், உடனே ஓடிவந்து கஜேந்திரனுடைய துன்பத்தை நீக்கி இன்பத்தை நல்கினர்.

"மதசிகரி கதறிமுது முதலை கவர் தரநெடிய
மடுநடுவில் வெருவியொருவிசை யாதிமூலமென
வரு கருணை நிருபன்"

—திருவகுப்பு.

யானை பொதுவாக அழைத்தபோது நாராயணர் வந்து காத்தரு ளிய காரணம்; நாராயணர் தனக்குச் சிவபெருமான் கொடுத்தருளிய காத்தற்றொழிலைத் தாம் செய்வது கடமையாதலால் ஓடிவந்தனர். ஒரு யஜமான் நீ இந்த வேலையைச் செய்யென்று ஒருவனுக்கு கொடுத் துள்ளபோது, ஒருவன் அந்த எஜமானையே அழைத்தாலும் எஜமான் கொடுத்த வேலையைச்செய்வது அப்பணியாளன் கடமையல்லவா? எஜமானைத்தானே அழைத்தான்? நான் ஏன் போகவேண்டுமென்றும் அப்பணியாளன் வாளாவிருந்தால் எஜமானனால் தண்டிக்கப்படுவா னல்லவா? ஆதலால் சிவபெருமான் தனக்குத்தந்த ஆக்ஞையை நிறைவேற்ற நாரணர் வந்தார் என்பது தெற்றென விளங்கும். கூர்த்த மதியினர் கூர்ந்து தெளிக.

கருத்துரை.

பரமசிவமூர்த்திக்கு குடிலைமந்திரத்தை உபதேசித்த ஞானதேசி கரே! சூரனைக்கொன்று வானவர் துன்பத்தை நீக்கிய முருகப்பெரு மானே! கஜேந்திரவரதராகிய கருமுகில்வண்ணரது மருமகரே! செந்திலாதிப! மாதர் மயக்கத்தில் அடியேனுழலாது, தற்போதத்தை விட்டு, விழிநாசிவைத்து ஒருவழிப்பட்டு சிவயோகியாக அடியேன் அசைவற்று இருக்கத் திருவருள்புரிவீர்.

ௐ ஸுப்ரஹ்மண்யாய நம:

॥ शिवानन्दलहरी ॥

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(44-வது பக்கத் தொடர்ச்சி)

मनस्ते पादाब्जे निवसतु वचः स्तोत्रफणितौ
करौ चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे
परग्रन्थान्कैर्वा परमशिव जाने परमतः ॥ ७ ॥

(7) மனஸ்தே பாதா[3]ப்[3]ஜே நிவஸது வச: ஸ்தோத்ர பணிதௌ
கரௌ சாப்[4]யர்சாயாம் ச்ருதிரபி கதா[2]கர்ண நவிதௌ[4] ।
தவ த்[4]யானே பு[3]ந்தி[3]ர் நயனயுக[3]ளம் மூர்த்தி விப[4]வே
பரக்[3]ரந்தா[2]ன் கைர்வா பரமசிவ ஜானே பரமத: ॥

பதவுரை.

பரமசிவ	- பரமசிவமூர்த்தியே,	புத்தி	- புத்தியானது,
மன:	- மனதானது,	தவ	- தேவரீரது,
தே	- உம்முடைய,	த்யானே	- தியானத்திலும்,
பாதாப்ஜே	- தாமரையனைய திருவடியிலும்,	நயனயுகளம்	- கண்களிரண்டும்,
வச:	- வார்த்தையானது,	மூர்திவிபவே	- உமது திருமேனிக் காட்சியிலும்,
ஸ்தோத்ரபணிதௌ	- உம்முடைய துதி நூல்களைச் சொல்லுவதிலும்,	நிவஸது	- வஸிக்கட்டும்,
கரௌ	- இரண்டு கைகளும்,	அத:பரம்	- இதற்குப்பிறகு,
அப்யர்சாயாம்ச	- உமது பூஜையிலும்,	கைர்வா	- வேறு எந்த இந்திரியங்களையாவது,
ச்ருதி	- காதானது,	பரக்ரந்தான்	- இதர கிரந்தங்களையாவது,
கதாகர்ண நவிதாவபி	- உமது கதைகளைக்கேட்பதிலும்,	ஜானே	- நான் அறிகிறேன். (அறியேன் என்றபடி)

பொழிப்புரை.

சிவபெருமானே! என் மனம் உமது பாதங்களிலும், வாக்கு உமது துதியிலும், கைகள் உமது பூஜையிலும், காது உமது சரித்திரங்களைக் கேட்பதிலும், புத்தி உமது தியானத்திலும், கண்கள் உமது திருமேனிக் காட்சியிலும் சதா இருக்குமாறு அருள்புரிவீர். அப்படி அருள் புரிவீராகில் எவ்வாறு இதர நூல்களைக்கற்று வாழ்நாளை வீணுக்க இடமுண்டு.

“சிந்தனை நின்றனக்காக்கி” என்றதிருவாசகத்தை இதனோடு வைத்துக்காண்க

यथा बुद्धिः शुक्तौ रजतमिति काचाश्मनि मणि-
र्जले पैष्टे क्षीरं भवति मृगतृष्णासु सलिलम् ।
तथा देवभ्रान्त्या भजति भवदन्यं जडजनो
महादेवेशं त्वां मनसि च न मत्वा पशुपते ॥ ८ ॥

(8) யதா புத்தி: சுக்தௌ ரஜதமிதி காசாச்மனி மணிர்
ஜலே பைஷ்டே க்ஷீரம் பவதி ம்ருகத்ருஷ்ணாஸு ஸலிலம் ।
ததா தேவப்ராந்த்யா பஜதி பவதன்யம் ஜடஜனோ
மஹா தேவேசம் த்வாம் மனஸி ச ந மத்வா பசுபதே ॥

பதவுரை.

மஹாதேவ - மஹாதேவரே,
பசுபதே - ஆன்மாக்களுக்குத்தலைவரே!,
சுக்தௌ - சிப்பியில்
ரஜதமிதி - வெள்ளியென்றும்,
காசாச்மனி - காசிக்கல்லில்,
மணி - இரத்தினமென்றும்,
பைஷ்டே - மாவு கலந்த,
ஜலே - தண்ணீரில்,
க்ஷீரம் - பாலென்னும்,
ம்ருகத்ருஷ்ணாஸு - கானல் நீரில்,
ஸலிலம் - தண்ணீர் என்றும்,
புத்தி. - புத்தியானது
யதா - எவ்விதமாய்,
பவதி - உண்டாகிறதோ,
ததா - அவ்விதமாய்,
ஜடஜன: - மூடனுனமனிதன்,
ஈச: - ஈஸ்வரராகிய,
த்வாம் - தேவரீரை,
மனஸிவ - மனதிலும்,
ந த்வா - எண்ணுமல்,
பவதன்யம் - உம்மைவிட்டு வேறொன்றை,
தேவப்ராந்த்யா - ஈசுவரனென்னும் மயக்கத்தால்,
பஜதி - சேவிக்கிறுன் (அல்லது ஆச்ரயிக்கிறுன்)

பொழிப்புரை.

ஓ மஹாதேவ ! பசுபதி ! சிப்பியை வெள்ளியென்றும், கற்களை இரத்தினமென்றும், மாவு கலந்தநீரைப் பாலென்றும், கானலை நீரென்றும் எப்படி மயங்கி எண்ணுகிறார்களோ அப்படியே, உமது சொரூபத்தை யுணரமாட்டாத மூடர்கள் அனைத்திற்கும் நாதராகிய தேவரீரைச் சிந்தித்து உணராமல், மற்றைத்தெய்வங்களை மயக்கத்தினால் வணங்குகின்றார்கள்.

சிவபெருமான் ஒருவரே முழுமுதற்கடவுள்; அவரையே வணங்குதல் வேண்டும். "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா லெங்களுத்தமனே" என்ற மணிவாசகனார் அமுதவசனத்தையும் உன்னுக.

गभीरे कासारे विशति विजने घोरविपिने
विशाले शैले च भ्रमति कुसुमार्थं जडमतिः ।
समर्प्यैकं चेतःसरसिजमुमानाथ भवते
सुखेनावस्थातुं जन इह न जानाति किमहो ॥ ९ ॥

(9) க[3]பீ[4]ரே காஸாரே விசதி விஜனே கோ[4]ரவிபினே
விசாலே சைலே ச ப்[4]ரமதி குஸு[2]மார்த்[3]தம் ஜட மதி ।
ஸமர்ப்யைகம் சேத: ஸரஸிஜ முமாநாத[2] ப[4]வதே
ஸு[2]கேநா வஸ்தாதும் ஜந இஹ ந ஜாநாதி கிமஹோ ॥

பதவுரை.

உமாநாத	- பார்வதி யம்மையாருக்குப்பதியே !	ப்ரமதிச	- சுற்றவும் சுற்றுகிறான்,
ஜந:	- உலகத்தார்,	ஏகம்	- ஒன்றான,
கபீரே	- ஆழமான,	சேத:ஸரஸிஜம்	- மனதாகிற தாமரைப்புஷ்பத்தை
காஸாரே	- மடுவிலும்,	பவதே	- உமதுபொருட்டு,
விஜனே	- ஜனங்களில்லாத,	ஸமர்ப்ய	- கொடுத்து,
கோரவிபினே	- பயங்கரமான காட்டிலும்,	இஹ	- இவ்விடத்தில்,
		ஸுகேந	- சுகமாக,
விசாலே	- விசாலமான	அவஸ்தாதும்	- இருக்க,
சைலே	- மலையிலும்,	கிம்	- ஏன்,
குஸுமார்த்தம்	- புஷ்பத்திற்காக)	நஜாநாபி	- அறிகிறதில்லை,
விசதி	- பிரவேசிக்கிறான்,	அஹோ	- ஆச்சரியம்,

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(50-வது பக்கத் தொடர்ச்சி)

முற்றோருங்குணர்ந்த முழுமுதற் கடவுளாகிய முருகப்பெருமான், கந்தவெற்பில், இலக்கத்தொன்பது வீரரும், பூதர்களும் தேவர்களும் புடைசூழ்ந்து சேவிப்ப, அரியணைமீது எல்லையில்லாத பெருங்கருணையோடு இனிது வீற்றிருந்தார். அக்காலை, அகத்திய முனிவர் குடிலை மந்திரத்தின் பொருளை யுணரவேண்டுமென்று விழைந்து, அதனை யுபதேசிக்குந் திறனுடைய குருநாதன் முருகவேளே என்று தெளிந்து, கந்தவெற்பணுகி, வீரவாகுதேவரிடம் விடைபெற்று, செம்பொற்கோயிலுக்குட் சென்று கந்தப்பெருமானை விதிப்படி மும்முறை வலம்வந்து வணங்கி வழிபட்டுநின்று, "எம்பெருமானே! பிரணவமந்திரத்தின் இரகசியப்பொருளை அடியேனுக்கு

பொழிப்புரை.

ஓ உமாபதே! ஆழமாகிய மடுவிலும், ஜன சஞ்சாரமில்லாத கொடிய காட்டிலும், உயர்ந்த மலையிலும், புஷ்பத்திற்காக மூடர்கள் திரிகின்றார்கள். ஏகமான தமது மனமென்னும் தாமரை மலரை உமக்கு அர்ப்பணஞ்செய்து அசைவற்றிருக்க அறியார்கள்; இது என்ன ஆச்சரியம்.

உள்ளிருக்கின்ற மனதாகிய மலரை இறைவன் திருவடியில் சூட்ட உணராது வெளியிலிருக்கின்ற மலருக்கு ஓடியலைகிறார்கள்; மனதாகிய மலரை இறைவன் திருவடியில் சூட்டவேண்டும்; அவ்வாறு சூட்டி அசைவற்று இருக்கவேண்டும். மனதை மலர் என்று அருணகிரிநாதரும் அழகாகக்கூறுமாறுகாண்க.

"ஆசைகூர் பத்தனேன் மனோ பத்ம
மான பூ வைத்து"

— திருப்புகழ்,

(தொடரும்.)

உபதேசித்தருளவேண்டும். சிவபெருமானுக்கும் தேவரீரன்றோ உபதேசித்தீர்? ஆதி குருப்புகழை மேவுகின்ற கொற்றவ! ஞானதேசிக! அடியேனை உய்விக்கவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து கைகட்டி வாய் புதைத்துநின்றார். கடம்பணியுந் தடம்புயத்தண்ணல், நன் யாணுக்கராகிய அகத்தியமுனிவருக்குப் பிரணவமந்திரப் பொருளையும், வேதாகமங்களின் மெய்ப்பொருள்களையும் உலகமெல்லாம் உய்யும்வண்ணம் உபதேசித்தருளினார்.

கந்தக்கடவுள் கந்தவெற்பில் எழுந்தருளியிருக்கும்பொழுது, திருமகள் கொழுநராங் கருமுகில்வண்ணரது புதல்வியர்களாகிய அமிர்தவல்லி சுந்தரவல்லி என்னும் இருவரும், என்று மகலாத இளமைக்கடவுளாம் குமாரக்கடவுளை மணந்துகொண்டு அவருக்கு மனைவியராக விரும்பி, சரவணப்பொய்கையில்வந்து, சடக்காமந்திரத்தை உன்னி பன்னெடுங்காலம் அருந்தவமிழைத்தார்கள். அறுமுகக்கடவுள், அவர்கள் தவத்திற்கிரங்கி அருள்புரிந்து தெரிசனந்தருளினார். இறைவனைக்கண்ட கன்னியரிருவர்களும் பெரிதும் அஞ்சி, திருத்தாள்மீது பணிந்து துதித்து நாணி நின்றார்கள். கந்தவேள் அவர்களை நோக்கி, "நீங்கள் யாது விரும்பித் தவஞ்செய்தீர்கள்" என்று வினவியருளினார். திருமால் புதல்வியர்கள் கைகுவித்து நின்று, "எம்பெருமானே! நீர் அடியேங்களைக் கல்யாணஞ்செய்து கொள்ளும்பொருட்டுத் தவமிழைத்தோம்; திருவருள் செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அறுமுகக்கடவுள் அவர்களை நோக்கி, "மூத்தாளாகிய அமுதவல்லியே! நீ இந்திரனுக்கு மகளாய் வளரக்கடவாய்; இளையாளாகிய சுந்தரவல்லியே! நீ பூமியிலே சிவமுனிக்குப் புதல்வியாகப்பிறந்து, வேடரெடுத்து வளர்க்கக் கடவாய்; அவ்வாறு நீங்கள் செல்லுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருள, கன்னியரிருவர்களும் கைதொழுது விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள்.

அமிர்தவல்லி ஒரு அழகிய குழந்தைவடிவங்கொண்டு மேருமலையில் இந்திரன்முன் சென்று "தேவர்கோமானே! யான் உன்னுடன்பிறந்த உபேந்திரனுடைய மகள்; ஆதலால் என்னை நீ மகளாக வளர்க்கக்கடவாய்" என்றாள். இந்திரன் அவளை நோக்கி, "தாயே! இங்கு வா" என்று சொல்லி எடுத்தணைத்து மிகமகிழ்ந்து, உள்ளங் குளிர்ந்து, உடல் பூரித்து, தனது ஊர்தியாகிய ஐராவதத்தையழைத்து, "இவள் நம்முடைய மகள்; இவளை நீ அன்போடு வளர்க்

கக்கடவாய்; இவளால் நமக்கு எல்லையில்லாத சீரும் சிறப்பும் உண்டாகும்" என்ருன். ஐராவதம் அக்குழந்தையைப் பிடரிமேற் கொண்டு சென்று, சத்திய உலகத்தின் தலைநகராகிய மனோவதியில் இருத்தி இன்புடன் வளர்த்துவந்தது. அதனால் அக்குழந்தைக்குத் தெய்வயானை என்னும் பெயருண்டாயிற்று. அத்தெய்வயானை திருமகள் நாணும் பெருவனப்புடன் விளங்கி, எந்த வேளையும் கந்தவேளைத் தியானித்துக்கொண்டிருந்தாள். இளையாளாகிய சுந்தரவல்லி தொண்டைநாட்டிலுள்ள வள்ளிமலையிலே வந்து 'குமாரநாயகனைக் குறித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தாள்.

முருகக்கடவுள், திருமால் புதல்வியரிருவருக்கும் வரமளித்தபின் கந்தகிரியடைந்து, பெருங்கருணையோடும் எழுந்தருளியிருந்தார். சில காலத்திற்குப்பின், இலக்கத்தொன்பது வீரர்களும் பூதகணங்களும் சூழத் திருக்கைலாசமலையை அடைந்து, தாய்தந்தையரிருவரையும் அன்புடன் வணங்கி, அவர்களுக்கு நடுவே கவின்பெற எழுந்தருளியிருந்தார். இவ்வாறு எழுந்தருளி யிருக்கும்பொழுது, இந்திரன், பிரமன், திருமால் முதலிய எல்லா தேவர்களும், சூரபன்மன் கொடுமைக்கு மிகவும் வருந்தி, உள்ளுவார் வினையகற்றும் வெள்ளியம் பொருப்பை யடைந்தார்கள். திருநந்திதேவர், "நில்லுங்கள்" என்று அவர்களைத்தடுக்க, அவர்கள் தளர்வுற்று பலநாள் பெருந்துன்புடன் நின்றுகொண்டிருந்தார்கள். அவ்வாறு நின்ற மாலயனாதிவானவர்கள், நந்திதேவரை வணங்கித்துதித்து, அவருக்குத் தங்கள் இன்னலை விண்ணப்பஞ்செய்தார்கள். அது கேட்ட திருநந்திதேவர் திருவுளமிரங்கி, "இனி நீங்கள் வருந்தவேண்டா; யான் எம்பெருமான் திருமுன் சென்று, உங்கள் குறையை விண்ணப்பஞ்செய்து விரைவிலே உங்களைப் பெருமான்முன் கொண்டுபோய் விடுவேன்; இங்கிருங்கள்" என்று சொல்லி, அவர்களை இருத்திவிட்டு, உள்ளே சென்று சிவபெருமானைவணங்கி, தேவதேவ! அரி அயன் ஆகண்டலனாதியமரர்கள் அனைவரும் திருக்கோயில்முன் வந்து துதித்து நிற்கின்ருர்கள்" என்று விண்ணப்பஞ்செய்தார். கருணைப் பெருங்கடலாகிய கண்ணுதற்கடவுள், "அவர்கள் எல்லோரையும் நம்முன்னே அழைத்துக்கொண்டுவா" என்று பணித்தருள, திருநந்திதேவர் திரும்பிவந்து "யாவரும் வாருங்கள்" என்று அருளிச்செய்தார்.

உடனே தேவர்கள் யாவரும் திருக்கோயினுள்ளே விரைந்து சென்று, அருட்பெருங்கடலாகிய அரனாரைப் பன்முறைவணங்கினர்

MAHAMAHOPADHYAYA DR. U. V. S... LIBRARY BESANT N... MADRAS.

கள். இந்திரன், "அருட்சத்தியாகிய அம்பிகையுடன் எழுந்தருளியுள்ள அண்ணலே! அடியேங்கள் எண்ணில்லாத யுகங்களாகச் சூரன் முதலிய அசுரர்களால் வருந்தி ஒடுங்கினோம்; அடியேனுடைய புதல்வனாகிய சயந்தனும் தேவர்களும் அரம்பையர்களும் சூரனால் சிறைப்பட்டு வருந்தி வாடியுள்ளார்கள்; சுவர்க்கலோகம் அசுரர்களால் அழிந்தது; முழுதொருங்குணர்ந்த தேவரீர் இவையெல்லாம் அறிவீரே? அடியேன் விண்ணப்பஞ்செய்தல் வேண்டுமா? கருணாகர! அடியேன் முன்னே தவஞ்செய்தபொழுது, நீர் எழுந்தருளிவந்து, "நம்மிடத்தே ஒரு குமாரன் பிறந்து சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று உங்களைக் காத்தருள்வன்" என்று திருவாய்மலர்ந்தருளினீர்; அவ்வாறே திருக்குமாரரும் திருவவதாரம் செய்திருக்கின்றாரே? இந்நாள்காறும் எங்கள் துயரத்தை நீக்கத் திருவுளங்கொண்டிலீரே? அடியேங்கள் பவப்பயன் இன்னும் தொலைந்திலதுபோலும்? சூரபன்மனை யழிக்கவல்லவர் வேறு யாருளர்? என் துயரத்தை தேவரீரிடமன்றி வேறு யாரிடங் கூறுவேன்? யாரை நோவேன்? கடல் நடுவில் செல்லும் மரக்கலத்தில் பாய்மரத்தின்மீதுள்ள காகத்தை விரட்டினும் அக்காகத்திற்கு அம்மரக்கலத்தையன்றி வேறு புகலிடம் யாதுளது? அடியேங்களுடைய அலக்கணை நீக்கவல்ல துணைவர் உம்மையன்றி ஒருவரும் இல்லை; நெருப்பின்மீதும் நித்திரை செய்யலாம்; நஞ்சையும் உண்ணலாம்; பகைவரால் உண்டாகும் துன்பத்தைப் பொறுக்க முடியாது; நாங்கள் இதுவரை அனுபவித்த துன்பம் போதும் போதும்; புதல்வருக்குத் தீமையை நீக்கவும் நன்மையைத் தரவும் தாதையரையன்றி வேறு யாருளர்? ஆதலால், கருணையங் கடலே! இனி எம்மைக்காத்தருள்வீர்; உமது திருவடிக்கே சரணம்" என்று விண்ணப்பஞ் செய்தான். அக்காலை, அரியும் அயனும் எந்தையே! சூரபன்மன் உயிர்களுக்குச் செய்யும் வருத்தம் எம்மாலே அளவிட்டுக் கூறமுடியாது; இனிச் சிறிதுந் தாமதியாது இப்பொழுதே அருள்செய்து அடியேங்களை ஆட்கொள்வீர்" என்று வேண்டினார்கள்.

திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் அவற்றைக் கேட்டலும் பெருங்கருணைகூர்ந்து, "தேவர்களே! இனி உங்கள் கவற்சியை விடுங்கள்" என்று அருளிச்செய்து, தமது பக்கத்தில் இன்புடன் எழுந்தருளியிருந்த இளம்பூரணராம் எந்தை கந்தவேளை நோக்கி, "மைந்த! உலகத்துள்ள உயிர்களுக்குத் துன்பஞ்செய்து தேவருல

கத்தையழித்து, கெடுதலில்லாத வலிமைகொண்டுள்ள சூரபன்மனை அசுரர்களோடு கொன்று, அதர்மத்தையழித்து, அறமார்க்கத்தை நிலைநிறுத்தி, அமரர்களுடைய துன்பத்தை நீக்கி, இந்திரனுக்கு அவனரசைத் தந்து, மீள்வாயாக" என்று பணித்தருளினர். குமாரக் கடவுள் அதுகேட்டு, "எந்தையே! அடியேன் இப்பணியைச் செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்தார். அதன்பின் சிவபெருமான் பதினொரு ருத்திரர்களை நினைந்தருள, அவர்கள் வந்தார்கள். முக்கண் மூர்த்தி "நீங்கள் இவன்கையில் படைக்கலங்களாக இருக்கக் கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து, அவர்களைப் படைக்கலங்களாக்கி பன்னிருபுயாசலப்பரமனிடந்தந்தருளினர். பதினொரு ருத்திரர்களும் தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்னும் பதினொரு படைக்கலங்களாகி, கந்தக் கடவுள் காமலரில் வீற்றிருந்தார்கள்.

பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும்
பொருவிலா வுருவமந் தோன்று
ளன்றுபெற் றுடைய வுருத்திர கணத்தோர்
நவிலருந் தோமரங் கோடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமு
மணிமலர்ப் பங்கயந் தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார்
விறன்மிகு மறுமுகன் காத்தில்

பின்னர் சிவபெருமான், ஏவியவுடன் ஐம்பெரும் பூதங்களையழிப்பதும், சகல பிராணிகளையும் ஒருங்கே முடிக்கவல்லதும், யாவர்மேல் விடுக்கினும் அவருடைய வன்மையையும் வரங்களையும் கெடுத்து உயிரை உண்பதும், எல்லாப்படைக்கலங்களுக்கும் நாயகமுமாகிய வேலாயுதத்தைச் சிருட்டிசெய்து, செவ்வேட்பாமன் திருக்காத்தில் கொடுத்தருளினர்,

ஆயதற் பின்ன ரேவின்மு தண்டத் தைம்பெரும் பூதமு மடுவ
தேயபல் லுயிரு மொருதலை முடிப்ப தேவர்மேல் விடுக்கினுமவர்தம்
மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி மன்னுயி ருண்பதேப் படைக்கு
நாயக மாவ தொருதனிச் சுடர்வே லல்கியே மதலைசைக் கோடுத்தான்

அதன்பின் ஐம்முகச்சிவனர், தாம் ஏவினவற்றைச் செய்து கொண்டு தம்பக்கத்துநின்ற இலக்கத்தொன்பது குமாரர்களை நோக்கி, "நீங்கள் யாவருக்கும் முதல்வனுகிய இக்குமரனோடு சென்று, அசு

ர்களைக் கொல்லக்கடவீர்கள்" என்று பணித்து, அவர்களுக்குப் பல படைக்கலங்களையும் உதவி, அறுமுகச் சிவனுருக்கு அவர்களைத் துணைப்படைகளாகக் கொடுத்தருளினுர். பின்பு அண்டாபரணர், நந்தி, உக்கிரர், சண்டர், அக்கினிநேத்திரர், சிங்கர் முதலிய கண நாதர்களை நோக்கி, "நீங்கள் இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களோடு செவ்வேளுக்குச் சேனுதிபதிகளாய்ச் செல்லக்கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து, முருகக்கடவுளுக்கு அவர்களைப்படைத்தலைவர்களா கக் கொடுத்தருளினுர். ஐம்பெரும்பூதங்களின் வன்மையையும் அங் கங்குள்ள பொருள்களின்வன்மையையும் ஒருங்குகொண்டதும், இலக் கங் குதிரைபூண்டதும், மனத்தினும் விரைந்து செல்வதுமாகிய ஒரு தேரைத் திருவுளத்தினுலே சிருட்டித்து, முருகப்பெருமானுக்கு ஏறும்வண்ணம் கொடுத்தருளினுர். இவ்வாறெல்லாம் சிவபெருமான் விரைந்துதவி, "இனி நீ போகக்கடவாய்; வெற்றிபெற்று யாவருக் கும் இன்பத்தை வழங்கக்கடவாய்" என்று பணித்தருளினுர்.

குமாரக்கடவுள் மகாதேவரையும் மலைமகளையும் வணங்கி, வலம் வந்து, மும்முறை நமஸ்கரித்து எழுந்து, துதித்துநிற்ப, நீலகண்டர் பெருமகிழ்வுற்று அம்முருகவேளைத்தழுவி, தமது அருமைத் திருக் கரத்தினுல் எடுத்துத் திருத்தொடையில் இருத்தி, உச்சிமோந்து திரு வருள்புரிந்து, எம்பெருமாட்டியாருடைய திருக்கரங்களிலே கொடுத் தருளினுர். எம்பெருமாட்டியார் தமது அன்புக்குன்றவிடமான இன் பக்குமாரரைத் தமது மடியில் இருத்திப் பெருங்கருணையோடு தழுவி, உச்சிமோந்து, "குழந்தாய்! இலக்கத்தொன்பான் வீரர்கள் படை ஞராய்ப் புடைசூழச்சென்று, அசுரர்களைக்கொன்று, இத்தேவர்க ளுடைய குறையைமுடித்து, மீள்வாயாக" என்று திருவாய்மலர்ந் தருளினுர். உடனே அறுமுகக்கடவுள் அம்மையப்பரை வணங்கி எழுந்து, விடைபெற்றுக்கொண்டு சென்றுர்கள். அங்குநின்று அரி யயன் ஆகண்டலாதி அண்டர்கள், "எம் பரமபிதாவே! நீர் அடி யேங்களைக் காத்தருளினீர்; இனி அடியேங்கள் துன்பந்தீர்ந்தேம்; யாதொரு குறையுமில்லை; உய்ந்தனம்; உய்ந்தனம்" என்று விண் ணப்பஞ்செய்துகொண்டு, சிவபெருமானையும் சிவகாமசுந்தரியையும் வணங்கி எழுந்தார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "உங்க ளுக்கு அருள்செய்யும் ஆண்டவனுகிய அறுமுகச்சிவத்துடன் நீங்க ளும் நடவுங்கள்" என்று விடைகொடுத்தருளினுர்.

விடையவன்பால் விடைபெற்றுக்கொண்டு செல்லும்பொழுது, விட்டுணுதேவர் அயலில்வரும் வாயுதேவனை நோக்கி, "நீ அறுமுகக் கடவுளுடைய தேர்மீது இருந்து முட்கோலும் மத்திகையுங்கொண்டு பாகனுய்ச் செலுத்தக்கடவாய்" என்று பணித்தார். வாயுதேவன் அதற்கியைந்து, ஆகாயத்திற்செல்லும் தேர்மேல் பாய்ந்து, தன்னின மாகிய வாயுக்கள் பக்கத்திலேவர, மகிழ்ச்சியோடு தேரைச்செலுத் திக்கொண்டு குமாரசுவாமி திருமுன்விடுத்து, "எம்பெருமானே! இத்தேர்மீது எறியருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். முருகக் கடவுள் பேரருள்புரிந்து அத்தேர்மீது எறியருளினர்.

அதுகண்ட இந்திரன் முதலிய இமையவர்கள் அனைவரும், "இனிச் சூரபன்மன் இறந்தான் இறந்தான்" என்று துள்ளி ஆர்த் தார்கள். இலக்கத்தொன்பது வீரர்களும் முருகக்கடவுளைச் சூழ்ந் தார்கள். இமையவர்களும் இருடியர்களும் அவ்வீரர்களைச் சூழ்ந் தார்கள். திருக்கைலாயமலையில் இருந்த அநந்தவெள்ளம் பூதங்க ளுள் இரண்டாயிரம் வெள்ளத்தார்கள் நூற்றெட்டு சேனதிபதிக ளோடும் முருகக்கடவுளிடத்தில் வந்து வணங்கித்துதித்து ஆர்வாரித் தார்கள். அவர்களிற் சிலர் பலவிதவாத்தியங்களை முழக்கினர்கள். அப்பூதர்களெல்லோரும் வாள், கதை, சூலம், வேல், மழு, ஈட்டி முதலிய பற்பல ஆயுதங்களை ஏந்தினேர்கள்; சடைமுடியுடையவர்; பற்பல நிறத்தினர்; அபையமென்று அடுத்தவர்க்கருள்புரியும் தண் ணருளுடையோர்; திருநீறும் கண்டிகையும் புனைந்தவர்; சிவபிரானை யன்றி பிறதேவரைக் கனவிலும் எண்ணுதவர்; இயமனும் அஞ்சுங் காட்சியர்; அண்டங்களனைத்திலுமுறையும் உயிர்த்தொகைக ளனைத் தினையும் உண்டுமிழ்ந்திடவல்லவர்; தம்மாற் கொல்லப்பட்டவரைச் சிவமூர்த்தியின் திருவருளால் படைத்திடும் பெருமிதமுடையோர்; இறந்துபட்ட இந்திராதி இமையவர் சிரமாலைகளைக் காத்திலும் உரத் திலும் பாதத்திலும் தரித்துக்கொண்டோர்; இத்தகைய பூதவெள்ளங் கள் சூழ அறுமுகக்கடவுள் திருக்கைலாசமலையை நீங்கிப் பூமியின் மேற்சென்றருளினர். அக்கால் எழுந்த புழுதிகளால் விண்ணும் மண்ணும் மறைந்தன; உலகிலுள்ள உயிர்களின் கண்களையும் நாசி யையும் அடைத்தன; அத்தூசிகளை முருகக்கடவுள் தமது ஒளியால் நீக்கிச்சென்றனர்.

(தொடரும்)

உ

ஓம் குஹாய நம:

கற்பு

(54-வது பக்கத் தொடர்ச்சி)

கற்புடைமகளிர்கள் பற்பலர் தோன்றி, நம் தமிழ்நாட்டிற்கு இன்றும் என்றும் அழியாத பெருமையை நிறுவினார்கள். பாண்டி நன்னாட்டில் சைவசமயங்குன்றி, சமண்சமய இருள்படர்ந்தபோது, திருஞானசம்பந்தரென்னும் திருவிளக்கைக் கொண்டு, அம்மாய இருளைக்கடிந்து, சைவசமய ஒளியைப்பரப்பிய கற்பின்மணியாகிய **மங்கையர்க்கரசியாரை** யுணராத சைவரும் உளரோ? நெடு நாளைக்குமுன் வாய்மொழியால்மட்டும் நிச்சயித்திருந்தவரன், செருக்களத்திறந்ததுகேட்டு, மணஞ்செய்துகொள்ளாதிருந்தும் நிச்சயித்ததனாலேயே, "நான் அவருக்கு மனைவியானேன்; இனி ஒருவரையும் மணஞ்செய்துகொள்ளேன்" என்று இளமைப்பருவத்திலேயே வளமெலாந்துறந்து, வெண்டுகிலுடுத்து, கைம்பெண் விரதத்தை மேற்கொண்டு, அலைமகள் கொழுநனுங் கலைமகள் கொழுநனுங்காணாத மலைமகள் கொழுநன் திருவாலயத் திருத்தொண்டுபுரிந்து, தம்பியாராகிய திருநாவுக்கரசரைக்கொண்டு, பரசமயங்களென்னும் களைகளைப் பறித்து, வைதிக சைவச்செழும்பயிரை விளைவித்து தவிய உலகம் போற்றும் **திலகவதியார்** வாழ்ந்த நாடு நம் நாடு. தனது நாயகனாகிய கோவலன் பொற்கொல்லன் மாயச்சூழ்ச்சியால் குற்றஞ்சாட்டப்பட்டு அரசனால் கொல்லப்பட்டதைக்கேட்டு, பதினாலுலகங்களும் அஞ்சுமாறு சீறி எழுந்து, அரசனைக்கடிந்துரைத்து மதுரைப் பெருநகரையே தன் கற்பின் கனலாலெரித்து

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
> திண்மை யுண் டாகப் பெறின்

பொய்யாமொழிக்கு இலக்கியமாக விளங்கிய எண்ணருங் குணமுடைய **கண்ணகி**யைப் பெற்றநாடு நம் நாடு. "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" என்று, ஒரு தவமிகு சித்தர்முன் அஞ்சாது கூறிய மாசறு கற்புடை **வாசுகி** யம்மையார் பிறந்த நாடு நம்நாடு.

கற்புடைப் பெண்களைக்கண்டால் கனலும் அஞ்சும்; கற்புடை மாதர்கள்மீது கதிரவனும் குளிர்ந்த கிரணங்களைப் பொழிவான். மூவருந் தேவரும் கற்புடைப்பெண்டிர் வாழுமிடத்தில் நீங்காதுறைவர். கற்புடைக்காரிகையர் திருவடிபட்ட இடமே புண்ணியதலமாம். கற்புடைப் பெண்கள் பெய்யென மழை பெய்யும்,

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை

— திருக்குறள்.

இத்தமிழ்மறைக்கு இலக்கியமாக விளங்கிய இருமகளிர் வாழ்ந்த நாடு நம்நாடு. அந்நங்கையரைப்பற்றிச் சிறிது விளக்குவாம்.

நற்குண நல்லொழுக்கங்களுக்கு உறைவிடமாக ஒரு செட்டியார் இருந்தார். திருவள்ளுவரைக் குருமூர்த்தியாகப் பெற்றவர்; இருநிதிக்கிழவனேபோல் பெருநிதி படைத்தவர்; **ஏலேல சிங்கர்** என்னுந் திருநாமம் பெற்றவர். அப்பெருந்தகையார்க்கு வாழ்க்கைத் துணைவிகளாக இரு மனைவியர்கள் இருந்தார்கள். நிலமடந்தையையும் மலர்மடந்தையையும் ஒத்தவர்கள். கொழுநன் குறிப்பறிந்து வேண்டியவற்றை வேண்டுமுன்னரே ஒழுங்காகச் செய்துமுடிக்குந் திறமுடையார்கள். சக்களத்திகள் என்ற பேர் அவர்களிடத்தில் கனவிலும் நிகழ்ந்ததில்லை. "இரு மனைவியரையுடையான் வீட்டில் பெருநெருப்பு வேண்டா" என்ற வசனத்தைப் பொய்யாக்கிவிட்டார்கள். செட்டியாராகிய முகத்திற்கு இரு கண்களைப்போல் கருத்தொருமித்து வாழ்ந்துவந்தார்கள். கணவனையே கடவுளாகக் கருதி வழிபடுங் கற்புடைப் பொற்பினர்கள். "இத்தகைய மாதர்மணிகளை மனைவியாகப் பெறுவதற்கு இம்மகானுபாவர் என்ன மாதவஞ் செய்தனரோ?" என்று பார்த்தவர் வாழ்த்து கூறுமாறு இன்பவாழ்வு நடத்தினார்கள். "மாறு இன்பத்தை வழங்கும் மணாளனைப் பெற்று வளர்த்துப் பருவகாலத்தில் நம்மிடங்கொடுத்த இவர்களுக்கு என்ன கைம்மாறு தருவது?" என்று மனமார நினைந்து, மாமன் மாமியரை முப்போதும் வணங்கி, அவர்க்கு வேண்டியவற்றை நல்கி, உபசரித்து வந்தார்கள். "மாமியார் மெச்சிய மருமகளில்லை" என்ற வசனம் அவர்கள்பால் பொய்த்துவிட்டது. "எங்கள் குலத்தை விளக்கவந்த இம்மாதரசி, மருமகள்மட்டுமன்று; குலதெய்வமு மிவளே! என் வயிற்றிற்பிறந்த மகளும் இவளுக்கிணையாகாள்" என்று, மாமியார் வாழ்த்துமாறு வாழ்ந்தார்கள். "ஆயிரந்தாயார்கள் ஒருங்குகூடினும்

எங்கள் மாமியாருக்கு இணையாகார்கள்" என்று அவர்களும் மாமியைத் துதிப்பார்கள். கணவனுடன்பிறந்தவர்களையும் தம்முடன் பிறந்தார்களைப்போல் எண்ணி, உணவுமுதலியன வழங்கி உபசரித்து வந்தார்கள்; நாத்திகளையும் அப்படியே அன்புடன் பேணிவந்தார்கள். பொறுமைக்குப் பொக்கிஷமாகிய அப்பூவையரில் மூத்தவள்பேர் அமுதவல்லீ; இளையாள் பேர் குமுதவல்லீ. இத்தகைய உத்தமிகளுடன் மனங்கலந்து வாழ்ந்திருந்த செட்டியாருக்கு ஒருநாளும் துன்பமேயில்லாதிருந்தது. கற்பின் காரிகையை மனைவியாக உடையவனுக்கே இகழ்வார்முன் ஏறுபோற் பீடுநடையுண்டு என்றபடி செட்டியார் மாசற்ற மனைவியரால் யாவரும் மதிக்க மனையறத்தில் மகிழ்ந்திருந்தார்.

அவ்வூரில் பஞ்சம்வந்தது; மழையின்மையால் பயிர்கள் தீய்ந்தழிந்தன; உண்ணீரும் கிடைப்பது அரிதாயிற்று; மக்கள் மிகவும் வருந்தினார்கள்; எறும்புக்கும் உணவுகிடைக்கவில்லை; பசிப்பிணியால் வாடி மெலிந்தனர்; ஆனால் செட்டியாருக்கு மட்டும் சிறிதேனும் துன்பமுண்டாகவில்லை; மனத்திற்கிசைந்த மாசிலா மணிகளாகிய மனைவியரைக் காணுந்தோறும் உளம் பூத்து உடல் பூரிப்பர். எத்துணைப் பெரியதுன்பம் நேரினும் கற்புடைய மனைவியை யுடையானுக்குத் துன்பந்தோன்றாது. அரிச்சந்திரன் துன்பசமுத்திரத்தில் முழுகியபோது மனைவியாகிய தெப்பத்தைக் கொண்டன்றோ கரை சேர்ந்தான்; இராமருடைய புகழுக்குக் காரணம் சீதையின் கற்பேயன்றோ? ஆதலால் ஏலேலசிங்கர் மிகவும் இன்பமாக இருந்தார். நகர மாந்தர்கள் அவருடைய மகிழ்ச்சியைக் கண்டு அதிசயித்து அவரை வந்து சந்தித்து, "ஐயா! உலகமுழுவதும் துன்புறும் இக்கொடிய சமயத்தில் தாங்கள்மட்டும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு என்ன காரணம்? தாமரைத்தடாகத்தில் இருப்பதுபோல் இன்புற்றிருக்கும் உமது வாழ்க்கையைக்கண்டு நாங்கள் வியப்புற்றிருக்கின்றோம்" என்று வினவினார்கள். செட்டியார், அன்பர்களே! இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணம் மனைவியேதான்; உயர்ந்த கல்வி, செல்வம், அடிமை முதலியவைகள் பொருந்தியிருந்தும் தீயகுணமுடைய மனைவியிருக்கில் அவனுக்கு அணுத்துணையும் சந்தோஷமிருக்காது; வறுமை பிணி முதலியவைகளிருக்கினும் அன்புடை நன் மனைவியிருக்கில் இன்பமே தோன்றும்.

இல்லதேன் இல்லவள் மாண்பானுள் உள்ளதேன்
இல்லவள் மாணுக் கடை

என்ற தெய்வப்புலவர் திருவாக்கும் இதுபற்றியே எழுந்தது. ஆதலால் கற்பே வடிவாகத்தோன்றிய எனது மனைவியரால் நான் எப்போதும் இன்பமாகக் காலங்கழிக்கிறேன். என் மனைவியர் என்னையே கடவுளாகக் கருதியுள்ளார்கள்; என் கட்டளையை வேதவாக்காக எண்ணி நிறைவேற்றுகின்றார்கள்; அவர்கள் முகத்தில் மலர்மகள் பிரியாது வாழ்கின்றாள். தினந்தோறும் நான் காலையில் எழுந்து அவர்கள் முகங்களில் விழிப்பதனால், குபேரனைப்போல் குறைவின்றி வாழ்கின்றேன்; அவர்களுடைய இனிய மொழிகளாகிய அமிர்தத்தைப்பானம்பண்ணுவதால் என்னுடைய சரீரம் இளமை மாறாமலிருக்கின்றது; உத்தம மனைவியைப்பெற்றவன் பாக்கியமே சிறந்த பாக்கியம்; எனது பத்தினிமார் தெய்வக் கற்புடைத்திருவினர்; அவர்கள் பெய்யென்றால் ஒரு முகூர்த்தகாலம் மழைபெய்யும்; ஐயமில்லை" என்றார்.

அதுகேட்ட நகரமக்கள் அற்புதமடைந்து, "ஐயா! மழையின்றி மாநிலத்தார்க்கில்லை' என்றபடி, மழையின்மையால் விளைவு குன்றி பசிப்பிணியுற்றுப் பரதவிக்கின்றோம்; கற்புடை மகளிராலேயே மழை பொழிகின்றது; ஆதலால் தங்கள் மனைவியரை தனித்தனியாக "மழையே பெய்" என்று கூறுமாறு தாங்கள் பணித்தருளல் வேண்டும்; தனித்தனியாக அவர்கள் தமது அமுதவாக்கால் கூறினால் மூன்றேமுக்காலும் மூன்றேமுக்காலும் ஏழரை நாழிகை விடாமழையாகப் பொழியும்; அதனால் ஏரி குளங்கள் நிரம்பி உலகம் இன்புறும்; உயிர்களின் துன்பம் நீங்கும்; புண்ணியசீலரே! தாங்கள் கருணைகூர்ந்து தமது மனைவியருக்கு இப்பொழுதே கட்டளையிடுவீர்" என்று வேண்டினார்கள்.

செட்டியார், "அப்படியே யாகுக; கற்பின் ஆற்றல் கதிரவனையுந் தடுத்ததல்லவா? கற்புடைப்பெண்டிர் மூன்று உலகத்தையும் புதிதாகச் சிருஷ்டிப்பர்! மழை பெய்யச்செய்வதா ஒரு ஆச்சரியம்? சற்று தாமதியுங்கள்" என்று செட்டியார் மனைவியர் இருவரையும் அழைத்தார். அவர்கள் உள்ளறையிலிருந்துவந்து கணவனை வணங்கிக் கைகுவித்து நின்றார்கள். ஊரார்கள் அம்மாதர்களது பக்தி விசுவாசத்தைக்கண்டு பரவசமுற்றார்கள். உடனே செட்டியார், மூத்த மனைவியை நோக்கி, "அமுதவல்லீ! உலகம் இன்புறுதற்பொருட்டு

"மழை பெய்" என்று சொல்வாயாக" என்று பணித்தார். அம்மையார் பதியின் பாதபங்கயத்தைப்பணிந்து, நான் கணவனையே கடவுளாக வழிபாடு செய்வது சத்தியமாயின் மழைபெய்க" என்று நினைந்து, எல்லோருக்குங் கேட்குமாறு வானத்தைப்பார்த்து "மழை பெய்க" என்று கூறினர் உடனே நீருண்ட மேகங்கள்கூடி இருண்டு மின்னி இடித்து மூன்றேமுக்கால் நாழிகைவரை பெருமழைபொழிந்தது. எங்கும் வெள்ளம்பெருகி பள்ளம் நிரம்பி தண்ணீர்மயமாயிற்று. பிறகு, செட்டியார் இளைய மனைவியை நோக்கி, "குமுதவல்லீ" உலகம் தழைக்கும்பொருட்டு மழை பெய்யச்சொல்" என்று கட்டளையிட்டனர். அந்த அம்மையார், மணாளனது மலரடிமேல் விழுந்து பணிந்து, உள்ளத்தில் பதியைச் சிந்தித்து, அனைவருக்குங்கேட்கும்படி, "வானங்காள் மழைபெய்மின்" என்று சொன்னார். உடனே முன்போலவே முகில்கள்கூடிக் கவிந்து விடாமழையாக மூன்றே முக்கால் நாழிகை பொழிந்தது. முன் வெள்ளத்தோடு பின்வெள்ளமுஞ்சேர்ந்து ஏரி குளங்கள் யாவும் நிரம்பின. பள்ளமும் மேடும் நீர் நிரம்பியது; நதிகள் கரைகடந்து பெருகின; ஜனங்கள் ஓடித் தங்கள் தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சினார்கள்; தரித்திரனுக்குத் தனப்புதையல் கிடைத்ததுபோல் துள்ளிக்குதித்தார்கள்; பெண்களென்றால் இவர்களே பெண்கள் என்பார் சிலர்; ஸ்ரீதேவியும் பூதேவியுமே இவ்வாறு திருவவதாரம்புரிந்தார்போலும் என்பார்சிலர்; கற்பு என்னும் பெருங்குணமே இவ்வாறு திருவுருவமெடுத்துவந்தது போலும் என்பார் சிலர்; பெண்கள் தெய்வங்களாகிய இம்மாதர்மணிகளை மனைவியாகப் பெறுவதற்கு இப்புண்ணியவான் என்ன மாதவம் செய்தாரோ? என்று அதிசயிப்பார் சிலர்; அவ்வுத்தமிகளின் திருவடிகள்மேற் பத்தியுடன் விழுவார் சிலர்; கைகூப்பித்தொழுவார் சிலர்; ஊரெங்கும் கொண்டாட்டமாயிருந்தது; எங்கும் இதே வார்த்தை; ஆடவரும் மகளிரும் திரள் திரளாகக்கூடிப்பேசினார்கள்; வாழ்த்தினார்கள், வந்தித்தார்கள்; சிந்தித்தார்கள்.

பயிர்கள் தழைத்தோங்கி மாகதபாயல்விரித்தாப்போல் வளர்ந்தன; பஞ்சந்தொலைந்தது; இச்செய்தி அரசன் செவிக்கு எட்டியது; அரசன் அற்புதத்தனாகி, அக்கற்பணங்குகளைக் காணவும், அவர்கள் மழைபெய்விக்கும் அற்புதச்செயலைத் தான் நேரிற்பார்க்கவும் விரும்பி அமைச்சரோடு ஆலோசித்தான். அமைச்சர்கள் அரசனைநோக்கி, "நெறிதவாத நிருபரேறே! கற்புடைக்காரிகையரைக்கண்டால் கன

னும் அஞ்சும்; அவர்கள் திருவடிபட்ட இடமே புண்ணியக்ஷேத்திரம்; இயமனையும் வென்ற சாவித்திரியம்மையாரது கற்பை உணராதார் யாவர்? கற்புடைமாதரைப்போற்றுகின்ற நாட்டில் மழைவளங் குன்ருது; கற்புடைக் காரிகையர் இருக்குமிடந் தாங்கள்போய்க் காண்பதே நலம் ''என்ருர்கள். அரசன் ஒருநாள் மந்திரிமார்கள் முதலிய பரிசனங்கள் சூழ ஏலேலசிங்கர் வாழும் திருமாளிகைக்கு வந்தான். செட்டியார் அரசனைவரவேற்று இருக்கைநல்கி உபசரித்தார் அரசன் செட்டியாரைப்பார்த்து, "ஆர்வலரே! கற்பின்வடிவாகிய தங்கள் பத்தினிமார்களை மழைபெய்விக்குமாறு பணித்தருளவேண்டும்; அவ்வற்புதச்செயலை யான் பார்த்து மகிழப்பெரிதும் விழைவுற்றிருக்கிறேன்" என்ருன். செட்டியார் உடனே மூத்தமனைவியை அழைத்து "அமுதவல்லி! மழைபெய்யச் சொல்" என்ருர். அவ்வம்மையார் கொழுநனைப்பணிந்து, வானத்தை நோக்கி, "மழைபெய்க." என்ருர். மழை பெய்யவில்லை, அம்மையாருக்கு அவமானமுண்டாயிற்று; ஜனங்கள் திகைப்புற்றனர். அதுகண்ட செட்டியார் "உப்பிட்ட நங்காய் உள்ளேபோ" என்ருர். அம்மையார் உள்ளே சென்ருர் செட்டியார் பிறகு இளையபத்தினியைக்கூப்பிட்டு, "குமுதவல்லீ! மழைபெய்யச்சொல்" என்று ஏவினர். அந்த அம்மையார் பதியைப் பணிந்து, மேல்நோக்கி, "மழைபெய்க" என்ருர்; உடனே மூன்றே முக்கால்நாழிகை பெருமழைப்பொழிந்தது; எல்லோரும் அதிசயித்தார்கள்; அரசனும் மகிழ்ந்தான். மூத்த மனைவியார் விஷயத்தில் ஐயுற்றனர். செட்டியார் அக்குறிப்பையுணர்ந்து, அரசன் முதலியோரை நோக்கி, எனது மூத்த மனைவியாகிய அமுதவல்லி, ஒருநாள் நான் "கறிக்கு உப்பிட்டையா?" என்றதற்கு, அவள் உப்பிடேன் என்ருளேயன்றி மற்றென்றுங் கவனியாமல் பாராமுகமாவிருந்தாள்; நானும் "அதற்குப் பிராயச்சித்தத்திற்குச் சமயம்வரட்டும்" என்று காத்திருந்தேன்; இப்போது பெருங்கூட்டத்தில் அவளுக்கு ஏற்பட்ட இச்செயலே அதற்குப் போதிய பிராயச்சித்தமாம்; "இப்போது பாருங்கள்!" என்று சொல்லி, மறுபடியும் "அமுதவல்லீ! என்று அழைத்து மழை பெய்விக்க ஏவினர். அம்மங்கையர்க்கரசியார், கணவனைவணங்கி, வானத்தைப்பார்த்து "மழை பெய்க" என்று சொன்னர்; சொல்லிமுடியுமுன் மேகங்கள்கூடி சோனமாரியாகப் பெருமழை பொழிந்தது. அரசன் முதலியோர்கண்டு பெருமிதமுற்றனர். "இவர்கள் தெய்வங்கள்" என்று வாழ்த்தினர்கள். அவ்விருவரையும் பணிந்து தங்கள் தங்கள் இருக்கை புக்கார்கள். ஆதலால் கற்பின் மடந்தையாராலேயே உலகம் வாழுகின்றது. கற்பெனும் பயிர் தழைத்தோங்குக.

(தொடரும்).

கொல்லாமை

சச்சிதானந்தம்.

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

"தின்ற சாதி தின்னவேண்டும், கொல்லுகிற சாதி கொல்ல வேண்டும்" என்ற பழமொழியைக்கூறி வீணே சிலர் விதண்டாவாதம் செய்கின்றனர். அப்பழமொழியை சாத்திரங்களைக்கொண்டு ஆராயுமிடத்து, தின்கிற சாதி எது? நாய், நரி, கழுகு, ஈ, எறும்பு முதலிய ஜந்துக்கள்தான் துற்கந்தத்தையும் பாராமல், தின்கிற சாதி. துற்கந்தத்தோடுகூடிய புலாலை நாமும் புசித்தால் இடுகாட்டில் பிணம் பிடுங்கித்தின்னும் நாய்க்கும் பேய்க்கும் நமக்கும் இருக்கின்ற பேதந்தான் என்ன? ஆகவே, மனிதர்கள் தின்கிற சாதியல்ல.

ஊனுணவு கொண்டாலன்றி வயிற்றிலுண்டாகும் பசி யடங்காதா? மாம்சம் தின்னுதவர்களிடத்தில் அழகு இல்லையா? தேக பலம் இல்லையா? அந்தோ! உடம்பு என்கிற உயிரைக் கூறிய வாள் கொண்டு அறிந்து, அம்மாமிசத்தை சாப்பிடுகின்றனர். அதினுல் பலம் ஏற்படுகிறதென்று கூறுகின்றனர்; அவர்கள் கூறுவது முற்றிலும் அசப்பியமான கூற்றேயாகும்; அவ்விதம் பலம் உண்டானுலும் எத்தனை யுகம் உயிருடன் இருக்கப்போகின்றோம், ஒரு நாளைக்கு அழியப்போகின்றோமே; இல்லை, "மாம்சத்தில் இனிய சுவையிருக்கிறது; நீங்கள் தின்றுபார்த்தால் விடவே மனம் வாரா"தென்று சிலர் கூறுகின்றனர்; புண்ணெனும் இழிவான புலாவில் இன்சுவையே இல்லை; ஆனுல், அவர்கள் கூறுவது எதுபோலுளதென்றால், ஒரு வண்டானது மனிதர் கழிக்கின்ற பவ்வீயையே உணவாகக்கொண்டு சந்தோஷிக்கும்போது, "இதைப்போன்ற மிக மாதுரியமான வஸ்து வேறுண்டோ? மனிதர் இதையுண்ணப் பிராப்தமில்லாத பாவிகளானு"ரென்று நினைத்து; அந்த மலத்தையே தேவாமிர்தமாக உண்ணும் அந்த வண்டைப்போல் துற்கந்த புலாவில் இன்சுவை இருக்கின்றதென்பார் கூற்றும் ஒக்கும்.

"சின்னஞ்சிறுவயதிலிருந்தே நாங்கள் புலால் சாப்பிட்டுவருகின்றோம்; நடுவில் விடப்படாது; அப்படிவிட்டாலும் முன்னிருந்த வாயுங்கையுமே இருக்கிறது; அதினால் புண்ணியமில்லை; ஆகவே தின்றவர்கள் தின்றேதான் தீரவேண்டு"மென்று ஒரு சிலர் நினைக்கலாம்; ஆனால், நாம் சிறுகுழந்தையாக இருக்கும்போது, வாசலிலுள்ள மலத்தைத்தின்றோம்; இப்பொழுது அந்த வாயுங்கையுமே இருக்கிறது; ஆகவே வயதுவந்த காலத்திலும் மலத்தைத்தான் தின்னவேண்டுமென்று யாராவது கூறுவார்களா? தெரியாமைத்தனமாக புலால் உண்டோம்; பாவம் என்று தெரிந்த பிறகும் புலால் சாப்பிடலாமா? மாமிசத்தை தின்பதினால் நம்முடைய உள்ளத்தில் எழுந்தருளியிருக்கின்ற குகேசப்பெருமானுடைய கோயில் அசுத்தப்படுகின்றது; அருமையான வயிற்றை குப்பைத்தொட்டியாக ஆக்கிவிடுகின்றோம்; திக்கற்ற பிராணிகளுக்கு சுடுகாடு இல்லாததினால் தன் பாழும் வயிற்றை அப்பிராணிகளுக்கு சுடுகாடாகத்தந்து உதவுகின்றனர்போலும். அவர்கள்தான் முதிர்ந்த சைவப்பற்றுள்ள அடியார்கள்; ஏனெனில், "சிவபெருமானுக்குக் கோயில் சுடுகாடல்லவா? சுடுகாட்டில் நிவாசம் செய்யும் கடவுள் சுடுகாட்டைவிட்டு நம் உள்ளத்தில் வீற்றிருக்கிறான்; ஆகவே ஒரு நாளைக்கு நம்முடைய உள்ளத்தைவிட்டு அக்கடவுள் சுடுகாட்டிற்குச் சென்றுவிடுவான்; நம்முடைய வயிற்றையே சுடுகாடாக ஆக்கிக்கொண்டால், சிவபெருமான் தன் உள்ளத்திலேயே இருப்பான்" என்று நினைத்து தன் வயிற்றை சுடுகாடாகச் செய்துகொள்கின்றனர்போலும். ஆ! என்ன அழகான பக்தி? சைவக் கடவுளிடத்தில் என்ன அபிமானம்? மிகவும் நன்று; நன்று; என்ன பேதமைத்தனம்? ஐயோ! புலாலுண்டு மீளா நாகிற்கு ஆளாகின்றனர்.

> மேவியதன் னூன்வளர்ப்பான் வேறொன்றி னூனுசரும்
> பாவி யிறந்தாற் படுநரகின்—மேவப்
> படுமென்று நாரதன்றன் பண்டுரைத்தான் பார்மேல்
> வடுவொன்று மில்லாய் மதி.

என்று சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளது. எவன் எந்த உயிரைக் கொன்றருந்துகின்றானோ அவன் அவ்விலங்கிற்கு எத்தனை உரோமங்களிருக்கின்றனவோ அத்தனை யுகங்கள்வரைக்கும் வெப்பமான நரகத்தில் புழுக்களெல்லாம் தன் சரீரத்தைத்துளைக்க அநேக துன்பங்களையனுபவிப்பான்.

கொன்று விலங்கின் றசைநுகரும் கொடுமை யோரவ் விலங்கினுடல்
துன்று மயிரேத் துணையாமேத் துணைய காலம் வெந்நரகி
னென்றி நுகர்வாய் புழுவொழுக வுழப்ப ரென்கை யுணர்ந்தேயோ
சுன்று சினவெங் கொடுவிலங்தும் பலவூன் றின்னக் கருதாவால்

—சிவதருமோத்தரம்.

எனவே புலாலுண்பதினுல் எத்துணை நரகம் கிடைக்கின்றனவென்பது நன்கு விளங்குகின்றதல்லவா? புலாலுண்பதனல் ஏதேனும் உடம்புக்கு நன்மையா? செம்மறியாட்டி னிறச்சியுண்டவனுக்குத்தான் செங்காப்பானெனும் வியாதியுண்டாகிறது, மானிறைச்சியுண்டவனுக்கு நயனகாசமும், கோழியிறைச்சி யுண்டவனுக்குப் பித்தவியாதியும், பன்றியிறைச்சி யுண்டவனுக்குக் கோரப்புண்களும், வான்கோழியின்றச்சி யுண்டவனுக்குக் காப்பனென்னும் வியாதியும், வாத்து இறைச்சி யுண்டவனுக்கு அரிகிரந்தினமும், கொக்கிறைச்சி யுண்டவனுக்குக் கீழ்மேகமும், கோழிமுட்டை யுண்டவனுக்கு வாதபைத்தியமும், நாரையிறைச்சி யுண்டவனுக்குக் கபமும், புறுவின் இறைச்சியுண்டவனுக்குச் சருமச்சொறியும், நீர்க்காக்கை யிறைச்சி யுண்டவனுக்கு நமையும், குரவைமீன்உண்டவனுக்கு அரோசிகரோகமும், இருமீன் உண்டவனுக்கு அக்கினிமந்தமும், கெண்டைமீன் உண்டவனுக்குக் குன்மநோயும், வாளைமீன் உண்டவனுக்கு வாயுரோகமும், சேற்கண்டைமீன் உண்டவனுக்குக் குடல்வாதக்குத்தலும், மடவைமீனுண்டவனுக்குக் கடுவன்வியாதியும், உல்லமீனுண்டவனுக்குப் பேதியும், மலங்குமீனுண்டவனுக்குக் கோழையும், கச்சக்கருவாடு உண்டவனுக்குக் கப பித்தமும், கொள்ளிக்கருவாடு உண்டவனுக்கு கிரந்திநோயும், நண்டுமாமிசமுண்டவனுக்கு இரத்தக்கிராணியும் உண்டாகின்றன. ஆகவே, புலால் சாப்பிடுவதால் வியாதியேயுண்டாகிறது. இம்மையிலும் துன்பம்; மறுமையிலும் துன்பம்; இனிவரு பிறவியிலும் துன்பம்; ஆகவே யாவரும் புலால் சாப்பிடப்படாது; புலால் சாப்பிடுவதால் புலையர் என்கிற சாதியுண்டாயிற்று; அந்தப் புலையர்கள் மலத்தைத்தின்ற பன்றியை நாம் சாப்பிடுவோமாகில் பறையருக்கும் தாழ்ந்தவராக அல்லவோ ஆகின்றோம்.

ஒரு சிலர் "பால் தயிர்மட்டும் சாப்பிடலாமா? அதுமட்டும் பாபமல்லவா?" என்று வாதிக்கின்றனர். சாத்திரத்தில் "பரஸ்பரோபக்ரஹோ ஜீவானம்" என்று கூறுகிறது. அதாவது ஜீவன்களெல்லாம் ஒன்றுக்கொன்று உதவியாக இருக்கின்றன எனவே ஆடு மாடு

முதலிய ஜீவன்கள் பால் தயிர் நெய்முதலிய வஸ்துக்களைத்தந்து மனிதனுக்கு உதவியாக இருக்கின்றன; நாம் அவைகளுக்கு யாதொரு ஆபத்தும் வராமற் காத்து வேண்டிய உணவு தந்து உதவவேண்டும். இப்பொழுது அவ்விதம் இல்லை; ஒரே தடவையாக மிருகங்கள் நமக்கு உதவிசெய்யும்படி நாம் அதற்கு உதவி செய்துவிடுகின்றோம். ஒரு தினத்திற்கு எத்தனையோ லக்ஷக்கணக்கான ஆடுமாடுகள் காருண்யம் நிறைந்ததும் இராமன் பிறந்ததும் கண்ணன் தோன்றினதும் ஆகிய நம் இந்தியாவில் பலியாகின்றது. அந்தோ! போதுமான பால் கிடைக்காததால் இந்தியாவில் ஒரு வருஷத்துக்கு 20 லக்ஷம்குழந்தைகள் இறப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே பால் தயிர் சாப்பிடுவதால் பாவம் இல்லை; அதனால் மிருகங்களுக்கு துன்பும் இல்லை. ஒருசிலர்தான்மட்டும் சைவராக இருக்கின்றனர்; மனைவிமக்கள் புலாலுண்டால் கண்டிப்பது கிடையாது; அது பெருங்குற்றமாகும். தான் சம்பாதிக்கிற பணமல்லவோ தீயவழியில் செல்லுகின்றது; "மனைவி செய்கின்ற பாவம் அவள்தானே அனுபவிக்கப் போகின்றாள்? நமக்கென்ன?" என்று நினைக்கின்றனர். தன் மனைவி பிறபுருஷனுடன் கூடிக்குலாவும்பொழுது இவன் காண்பானேயாகில் அஞ்ஞான்று என்ன கோபம் உண்டாகிறது? கொல்லுவதற்கும் மனந்துணிகிறானல்லவா? என் மனைவி பிற புருஷனை இச்சித்தால் அந்த பாவம் அவளே அனுபவிக்கிறாளென்று இவன் கண்டிக்காமல் இருக்கிறதானே? அந்தப்பாவம் இவனையும் அடையும். அதுபோல் இவன் மாமிசம் சாப்பிடாவிடினும் மனைவி மக்கள் சாப்பிட இவன் சம்மதித்திருந்ததால், அகல்லிய மாம்சம் சாப்பிட்ட தோஷம் இவனுக்கு உண்டாகிறது; புலால் வாங்கப் பொருள் தந்ததால், பொருளால் கொன்ற தோஷமும் இவனைச்சார்கின்றது. ஆகவே பெரியோர்கள் தன் குடும்ப பரிவாரங்களை சைவர்களாக முயற்சிசெய்ய வேண்டும்.

என்னை யீன்றெடுத்த அன்னையீர்! உங்களுக்கும் இந்தக்காலத்தில் கருணை இல்லையே? "பெண்கள் மனம் இளகிய நெஞ்சுடையவர்கள்" ளென்று கூறுகின்றனரே? உங்கள் குழந்தைக்கு இருமல் வந்தால், கோழிமுட்டையை உடைத்துப் பாலுடன்சேர்த்து தருகின்றீர்; இது காருண்யத்திற்கு அழகாகுமோ? ஐயோ! முட்டையொரு கருவல்லவா? கருவை அழிக்கலாமா? முட்டையையுடைக்கிற பாவத்தினாலல்லவோ, பெண்களுக்கு மறுபிறப்பில் அவருடைய கருவானது

பரிபூரணமாக ஆகாமல் மூன்று மாதத்திலும், நான்கு மாதத்திலும் கலைந்துவிடுகிறது; இதைச் சிந்திக்கப்படாதா ? இன்னும் சிலபெண்கள் சின்னஞ்சிறு உயிர்களாகிய உள்ளான், கோழி, முதலிய ஜீவன்களை அறிவாள்மனையில் நறுக்குகின்றனர். அவ்விதம் அறியும்போது அச்சிற்றுயிர்கள் என்னமாப் பதைபதைக்குமோ ? அவர்கள் மனம் நடுங்கவில்லையே ? கை கூசவில்லையே ? உடல் அசையவில்லையே ? அவர்கள் நெஞ்சம் வன்னெஞ்சோ ? இரங்காத மாநெஞ்சோ ? இரும்பு நெஞ்சோ ? மண்ணாங்கட்டி நெஞ்சோ ? யாதோ தெரியவில்லையே ? இன்னும் ஒரு சிலர், மழைக்காலத்தில் குளிருக்கு நன்றாக இருக்குமென்று சிறகையிழந்த ஈசலைக் கொண்டுவந்து வாணலியிலிட்டு வறுத்து சாப்பிடுகின்றனர்; வறுக்கும்பொழுது அச்சூடு தாங்காமல் மெல்லிய சரீரத்தையுடைய அவ்வீசல் துடிதுடிக்கின்ற கோர சம்பவத்தைக்கண்டும் அவர்கள் கண்களில் நீர்வடிய இல்லையே ? கருணையையும் அவ்வீசலுடனேயிட்டு வறுத்தனரோ ? குழந்தை வியாதியினால் மெலிந்துவிட்டால், ஒணான் உங்கள் குழந்தையை என்னபண்ணிற்று ? நான்குவழி கூடுகிற சந்தியில் பொங்கல்வைத்து ஒணானை அறுத்துவிடுகின்றீர்களே ? பாதியறுத்தும் கத்தி கூர்மையாயில்லையென்று அவைகளைவிட்டு வாளைக் கூராக்கிக் கொண்டுவந்து வதைசெய்வது கருணைநிறைந்த பெண்கள் இயல்புக்குத்தக்கதோ ? தாய்ஒணான் தன் குழந்தையைக்காணாமல் என்னமா பாதவிக்குமோ ? ஒணானுக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு அல்லவா ? ஜீவகாருண்யமில்லாததனால் தர்மம் குன்றி அதர்மம் தலைவிரித்து ஆடுகின்றது. பிறமதஸ்தர்கள் நம் சைவமதத்தை எளனஞ்செய்கின்றனர். ஆகவே பிற உயிரைக்கொன்றருந்தும் பொல்லாத தீய வழக்கத்தை அறவேயொழிக்கவேண்டும் ; ஆனால், எங்கள் கற்பைக் காப்பாற்றும்பொருட்டு கணவன் சொற்பிழை யாது ? நாங்கள் சிறிய சிறிய உயிர்களைக்கொன்று கறி சமைக்கின்றோம்; நாங்கள் என்செய்வோம் ?" என்று நீங்கள் நினைப்பீர்கள். பதிக்கு நாகம் வாராமல் காப்பது பெண்களுடைய தர்மமல்லவா? உங்கள் கொழுநர்கள் புலால் சமைக்கச்சொல்லும்பொழுது, "மீன் ஆடு கோழிகளும் நம் குழந்தைகளேயாகும்; ஆகவே உயிர்க்கொலை புரியப்படா" தென்று இனிமையாகக்கூறி, உங்கள் கண்ணம்பைச் செலுத்தி, அவர்களை உங்கள் வசமாக ஆக்கி, அத்தீய வழியினின்றும் தப்புவிப்பது உங்கள் கடன் அல்லவா? பதிசொற்றுறப்பது பாவமேயெனில், அப்பாவத்தை

ஓம் குஹாய நம:

குமரகுருபர ஸ்வாமிகள்

சரித்திரம்.

A. M. நாராயணசாமி அய்யர், மதுரை.

நிலமகள் திலகம் என விளங்கும் பாரதகண்டத்தின் எந்நாட்டினும் நன்னாடாய் விளங்கும் முத்துடைப் பாண்டிய நாட்டினை வளம் படுத்தும் நதிகள் பலவற்றுள் சிறப்புற்றது தாம்பிரவர்ணிஆகும். அவ்வாற்றின் வடகரையில் திருநெல்வேலிக்கும் திருச்செந்தூருக்கும் இடையே சிறந்து திகழும் ஓர் திருப்பதி ஒருங்கே வைஷ்ணவர்களாலும் சைவர்களாலும் போற்றப்படுவதாகும்.

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனால் படைக்கப்பட்ட எண்பத்து நான்கு ஜீவராசிகளுக்குள் பெறுதற்கரிய மானிடப்பேற்றைப் பெற்றவர்கள் அடையவிரும்பும் மோக்ஷ சாம்ராஜ்ஜியம் எதுவோ அதுவே அத்திருப்பதியின் பெயராகும்; இம்மோக்ஷவீட்டை எவ்விதம் வைணவர்கள் வைகுண்டம் என்றும், சைவர்கள் கைலாயம் என்றும் கூறுகிறார்களோ அவ்விதமே அப்புகழ் மலிவுறும் திருப்பதியும் முறையே வைணவர்களால் ஸ்ரீவைகுண்டம் என்றும் சைவர்களால் ஸ்ரீ திருக்கைலாயபுரம் என்றும் போற்றப்படுவதாகும்.

இற்றைக்கு சுமார் 320 ஆண்டுகட்கு முன்னர் சைவ வேளாள குலத்தோன்றலாகிய ஷண்முகசிகாமணிக் கவிராயர் என்பவர் அப்

நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். மங்கையர்க்கரசியின் குலத்திற்பிறந்த நீங்கள் சைவத்தைக் கடைப்பிடிக்கவேண்டாமா! சைவமுள்ள என் தாய்மார்கள் சைவமில்லாத பெண்களைச் சைவமாகத்திகழச்செய்விக்கும்படி உங்கள் சிறடியில் என் முடிதோய நமஸ்கரிக்கின்றேன்.

ஜீவகாருண்யம் எங்ஙனும் எஞ்ஞான்றும் பம்பிப்பரவுவதாக; ஒப்புயர்வில்லாச் செப்பருஞ் சைவசமயம் தழைத்தோங்குவதாக; என எல்லாம் வல்ல முருகப்பெருமானை வழுத்துவோமாக.

தயாசமுத்திரங்களாகிய தாய் தந்தைகளே! இக்கட்டுரையில் குற்றமிருக்குமாயின் பொறுப்பது உங்கள் கடனேயாகும்.

புகழ் மலிவுறும் திருக்கைலாயபுரத்தில் கைலாயநாதர் கோயிலை அடுத்து இருக்கும் சைவர்வாழும் தெருக்களில் கற்பிற்சிறந்த மனைவியார் சிவகாமசுந்தரி அம்மையாரோடு இல்லறம் இனிது நடாத்தி வந்தார்,

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்ற பொய்யாமொழிக்கு இணங்க ஷண்முகசிகாமணிக் கவிராயர் நாடோறும் தன்னை நோக்கிவரும் விருந்தினரை உணவுகொடுத்து உபசரித்து இன்னும் விருந்து வருமோவென எதிர்பார்த்திருப்பர். அவர்தம் மனைவியாரோவெனில், "மாசிலாக்குலத்துவந்தாள்; வருவிருந்து உவப்ப ஊட்டும் நேசம் மிக்கு உடையாள்; கொண்கனினைப் பறிந்து ஒழுகும் நீராள்;" இவ்வண்ணம் அவர்கள் இருவரும் வருவிருந்தினரைக் கண்டவுடன் இனியமுகத்துடன் நல்வரவுகூறி, அவர்களது பசியைத்தீர்த்து உதவிசெய்து வந்தமையால்

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகமலர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

என்ற பொய்யாமொழி பொய்க்காமல் அவர்களுக்கு திருமகளது திருவருளால் சம்பத்துக்கள் மேன்மேலும் உண்டாவதாயிற்று.

சகல சம்பத்துக்கள் இருந்தும் புத்திரபாக்கியம் மட்டும் இல்லாமல்போகவே தம்பதிகள் இருவரும் அடியவர் இச்சையில் எவை எவை உற்றன அவை தருவித்து அருள்பவனும் ஷண்முகநாதனது பதமே தமக்கு கதியென்று எண்ணி, திருச்செந்திலம்பதியை அடைந்து ஓர் குமாரன் நிமித்தம் குன்றமெறிந்த குமாவேட்கடவுள் திருமுன்பு வரம் இரந்தனர்.

கருதுவார் யனம்புகும் கருணைவாரிதியும், அறிவால் அறிந்து இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனுமாகிய செந்திலாதிபன், ஷண்முகசிகாமணிக்கவிராயரது, இடைஞ்சல் களைவான்வேண்டி அவர்களது கனவில்தோன்றி புத்திரபாக்கியம் தந்ததாகக்கூறி மறைந்தனன்.

கனவுநீங்கிய ஷண்முகசிகாமணி கவிராயரும் அவர்தம் மனைவியாகிய சிவகாமசுந்தரி அம்மையாரும், பெருமானது திருவருட்டிறம் பெரிதும் போற்றித்துதித்து, அவணின்றும் திருக்கைலாயபுரம் அடைந்தனர். திங்கள் பத்துக் கழிய நல்லதோர் சுபதினத்தில் சிவ

காமி அம்மையார் ஓர் ஆண்மகவைப்பெற்றனள். பலகாலும் மக்கட் பேறு இல்லாது தவங்கிடந்து குமானது அருளால் குமாரன் கிடைக்கின் அவர்களது ஆனந்தம் அளவிடத்தகுமோ! பின்னர் நல்லதோர் நாளில் குமரப்பெருமானது திருவருளால் அடைந்தசெல்வம் ஆனது பற்றி அத்தனியிளங்குழவிக்கு குமரகுருபரன் என்றும் திருப்பெயர் இட்டு மகிழ்ந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தனர்.

ஷண்முகசிகாமணிக் கவிராயரும் அவர்தம் கற்பிற்சிறந்த மனைவியாரும் செய்த நோன்பின்பயனாக ஞானசிரியராம் ஷண்முகமூர்த்தியால், சைவம் தரணியில் தழைத்து ஓங்குவான்வேண்டி அளிக்கப் பெற்ற சீர் இளங்குழவியானது, "சும்மா இரு சொல்லற" என்ற நிருவிகல்ப சமாதியை அவனியில் தோன்றுமுன்பே அடைந்துவிட்ட படியினாலேயே, ஆண்டுகள் மூன்று ஆகியும் குழந்தை வாய்திறந்து மழலை ஆடி தாய்தந்தையரை மகிழ்விக்கவில்லை; இவ்வுண்மை அறியாத பெற்றோர்கள், "மகப்பேறு பெற்றும் அதன் மழலைச்சொல்லைக் கேட்டு ஆனந்திக்க நாம் கொடுத்துவைக்கவில்லையே? "குழலினிது யாழ்இனிது என்பர் தம் மக்கட் மழலைச்சொல் கேளாதவர்" "மக்கள் மெய்தீண்ட உடற்கின்பம் அவர் மழலைச்சொல் கேட்டல் செவிக்கு இன்பம்" இதுவும் செந்திலாண்டவன் சோதனையோ? அன்றி முன் செய்த தீவினைப்பயனோ?" எனப்பலவாறு வருந்தினர்.

அடியார்படும் துயரம்காணச் சகியாத கார்த்திகேயன், குமரகுருபரருக்குப் பக்குவம் அடையுங்காலம் உண்டாவதற்கு, இன்னமும் இரண்டு ஆண்டுகள் உள்ளபடியால், அவரது பெற்றோர்கள் மழலைச் சொற்கேட்டு ஆனந்திப்பான்வேண்டி மற்றுமோர் குழந்தையை அளித்தனர். இரண்டாவதாகத் தோன்றிய குழந்தைக்குக் குமரன் என்று பெயரிட்டு அதன் மழலைச்சொல்லைக் கேட்டு இன்புற்றார்களே யாயினும் தமது மூத்தகுமாரன் தனிவேற்கடவுள் தயவால் தரப்பட்டவன் வாய்திறந்து மழலை ஆடாத மனத்துயரம் அவர்களைவிட்டிலது.

குமரகுருபரருக்கு ஆண்டுகள் ஐந்து நிரம்பியும் அப்பொழுதும் அவர் வாய்திறந்து பேசாதபடியால், மிகவும் சஞ்சலமடைந்த பெற்றோர்கள், அயில்வேற்கடவுளால் அளிக்கப்பெற்ற அத்தனியிளங் குழவியை அவனது திருவடியிலேயே கிடத்தி வரம்கிடைப்பது எனத் நல்லதோர் நாளில் திருச்செந்தூரை அடைந்தனர்.

(தொடரும்)